# ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அமைப்பு விதிகள்

**(09.01.2022 இல் நிறைவேற்றப்பட்டது)**

# ஜனநாயக மக்கள் காங்கிரஸ்
# திருத்தப்பட்ட அமைப்பு விதிகள்
(09.01.2022 இல் நிறைவேற்றப்பட்டது)

## விதி -01

**பெயர்:**

இந்த நிறுவகம் " **ஜனநாயக மக்கள் காங்கிரஸ்**" என்று பெயர்பெறும்.

பின்வரும் விதிகளில் "**ஜ.ம.கா**" என்று குறிப்பிடப்படும்.

## விதி-02

**நோக்கம்:**

மேலகம் மற்றும் மலையகம்வாம் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் தேவைகள் கல்வி வளர்ச்சி அபிவிருத்தி என்பவற்றை அரசியல் ரீதியாக அடையப் பெறும் வகையில் மக்கள் பிரதிநிதிகளாக சேவையாற்றும் நோக்கில் "ஜ.ம.கா" செயல்படும்.

## விதி-03

**அடிப்படை கொள்கைகள்:**

01.எங்க ளை பிரகேசமம் மகமம் னிய பகுகிகள் அல்லகு மகங்கள் மீது அகிக்கம் செலக்காக வகையில் மகச்சார்பற்ற சோசலிச ஒற்றையாட்சி அடிப்படையில் அமைய வேண்டும்.

02. இலங்கையைத் தாயகமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவருக்கும் சிறிலங்காவில் பூரண குடியுரிமை நிலைநாட்டுதல், அடிப்படை உரிமை சம உரிமை சம அந்தஸ்து என்பவற்றை வலியுறுத்தப்பட வேண்டும்.

03. உயர்வு, தாழ்வு, வேற்றுமை, என்ற கற்பிக்கும் சாதி அமைப்பினை ஒழித்து சாதி இல்லாத சமத்துவ சமுதாயத்தை உருவாக்குதல்.

04.இலங்கை முழுவதிலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பொருளாதார

சமூக சமய மொழி கலாச்சார உரிமைகளை பாதுகாத்தல்.

05.அடிப்படை ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து தொழில் கௌரவத்தை ஏற்று மனிதனை மனிதன் சுரண்டும் சோசலிச திட்டமிடல் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்குதல்.

06.சிங்கள முஸ்லீம் நிலத்தோடு நாட்டோடும் சமாதானமாக சகவாழ்வும் ஒத்துழைப்பும் என்ற அடிப்படையில் நட்புறவை நிலைநாட்டுதல்.

## விதி-04

**உறுப்புரிமை:**

ஜ.ம.கா வின் நோக்கங்களையும் அடிப்படைக் கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எவரும் உறுப்பினர் விண்ணப்பிக்க தகுதி உடையவர்.

விண்ணப்பிக்கும் எவரும் நான் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் இலக்கியங்களையும் கட்டுப்பாடுகளையம் ஏற்றுக் கொள்கின்றேன். என்று இக்கால் உறுதிப்படுத்துகிறேன் இந்த வாக்குறுதியை செய்து உறுப்பினர் படிவத்தில் கையொப்பம் இட வேண்டும்.

உறுப்புரிமை கட்டணமாக ஒருவர் ஒரு வருடத்திற்கு 20 ரூபா செலுத்த வேண்டும்.

உறுப்புரிமை விண்ணப்பத்தையும் உறுப்புரிமை கட்டணத்தையும் செயலாளரிடம் கொடுத்தல் வேண்டும்.

விருப்புரிமை விண்ணப்பத்தையும் கட்டணத்தையும்நேரே தலைமைக் கழகத்துக்கு அனுப்பலாம்.

ஒவ்வொரு விண்ணப்பமும் மத்திய செயற்குழுவினால் ஏற்று கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு விண்ணப்பத்தையும் வெளி கூறாமல் நிராகரிக்க மத்திய செயற்குழுவிற்கு உரிமை உண்டு.

உறுப்பினர் ஒருவர் கீழ்வரும் காரணங்களினால் உறுப்புரிமை இழப்பர் :-

அ. உறுப்புரிமை பணம் செலுத்தப்படாத மூன்று மாதங்களுக்கு மேல் இருந்தால் கட்டணம் செலுத்தி மீண்டும் புதுப்பிக்கும் வரை உறுப்புரிமை இழப்பர்.நிலுவை

அ. ஐ.ம.கா கட்டுப்பாட்டையம் கொள்கையோ மீறிய நடக்கைக்காக ஒமுங்கு நடவடிக்கை குழுவின் சிபார்சின் பேரில் மத்திய செயற்குழுவினால் உறுப்புரிமை இருந்து நீக்கப்படுவார்.

இ. கூட்டணியின் பதவியாளராக இருந்து ஒழுங்கு நடவடிக்கை குழுவின் சிபார்சின் பேரில் பொதுக்குழுவினால் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்படுவார்.

ஈ. ஜனநாயக மக்கள் காங்கிரஸிற்கு ஏற்படக் கூடிய பாரிய தீமையை தடுக்கும் பொருட்டு செயலாளரால் அவசிய ஒழுங்கு நடவடிக்கையாக உறுப்பில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை குழுவிற்கு பாரபடுக்கப்பட்டவர் அல்லது ஒமுங்கு நடவடிக்கை குமுவினால் இடைநீக்கம் செய்யப்பட்டு மத்திய செயற்குழுவில் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் உள்ளவர் அக்காலத்தில் உறுப்புரிமையை இழப்பர்.

## விதி-05

**ஐ.ம.கா தொகுப்பு:**

ஐ.ம.கா பின்வருவனவற்றுள் தொகுப்புறும் :

*01.* ஐ.ம.கா அங்கத்தினர்.

*02* ஐ.ம.கா இளைஞர் அணி.

*03* ஐ.ம.கா மகளிர் அணி.

*04* பாராளுமன்றக் குழு.

*05.* பொதுக்குழு.

*06.* மத்திய செயற்குழு.

*07.* வருடாந்த மாநில மாநாடு சிறப்பு மாநாடுகளும்.

*08.* செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணைந்த மத்திய நிறுவனங்கள்.

## விதி-06

**மூலக் கிளைகள்:**

மத்திய செயற்குழுவின் கட்டளைப்படி கிளைகளை அமைப்பதற்கும் அவர்களை மாற்ற வேண்டிய தேவை ஏற்படின் அது பற்றி மத்திய செயற்குழுவிற்கு விரைந்துரைப்பதட்கும் மூலக்கிளை அமைப்பு கூட்டத்திற்கு தலைமை தாங்கி கிளை பதவியாளர். செயற்குழு உறுப்பினர் ஆகியோரின் தெரிவை நெறி நடத்துவதற்கும் தொகுதி கிளைகளுக்கு மூலக்கிளையின் தலைவர் செயலாளர் தவிர்ந்த மூன்றாவது உறுப்பினர் தெரிவு பற்றி மூலக்கிளை செயற்குழுவிற்கு  குழுவுக்கு ஆலோசனை வழங்கும் தொகுதி அமைப்பாளருக்கு  அதிகாரம் உண்டு.

ஒவ்வொரு கிளைக்கு ஒரு தலைவர் ஒரு துணை தலைவர் ஒரு செயலாளர் ஒரு துணை செயலாளர் ஒரு பொருளாளர் ஆகிய ஐந்து பதவியாளரையும் ஐந்து முதல் பத்து செயற்குழு உறுப்பினரையும் கொண்டு இயங்கும்.

கிளைகள் செயற்படும் விதிகளை மத்திய செயற்குழு அமைக்கலாம்.

கிளைகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அவற்றை கலைக்கவோ உதவியாளரையும் செயற்குழுவையும் நீக்கி புதிய தேர்தல் நடத்தவும் மத்திய செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

ஒவ்வொரு கிளையினதும் வருடாந்த கூட்டம் கூட்டணியின் மாநில மாநாட்டிற்கு நியமிக்கப்பட்ட திகதிக்கு இரண்டு மாதங்களின் முன்பாவது கூட்டப்படல் வேண்டும்.

ஏழு நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தலுடன் கிளையின் செயலாளர் வருடாந்த பொதுக் கூட்டத்தை கூட்டல் வேண்டும் அக் கூட்டத்தில் கிளையின் பதவியாளர் செயற்குழு உறுப்பினர் தெரிவும் கிளை பொருளாளரின்  வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தலும் கிளைச் செயலாளரின்  வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தலும் இடம்பெறும்.

கிளை செயலாளர் கிளையின் அங்கத்தவர் பட்டியலை வைத்துக் கொள்ளல் வேண்டும் அதன்படி ஒன்றையும் அங்கத்தவர் விண்ணப்ப படிவங்களையும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். வருடாந்த கூட்ட முடிவில் புதிய அங்கத்தினர் பட்டியலையும் அவர்களை விண்ணப்ப படிவங்களையும் அங்கத்தவர் மாற்ற விபரங்களையும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு பொருளாளரும் அங்கத்தவர் உறுப்புரிமை பணம் அன்பளிப்பு ஆகியவற்றால் சேர்க்கப்பட்ட தொகைகளுக்கு சரியான கணக்குகள் வைத்துக்

கொள்ள வேண்டும்.

கிளையின் அங்கத்தவர் பட்டியலை வைத்திருத்தல் வரவு செலவு கணக்கு வைத்திருத்தல் ஆகியவற்றுக்கு கிளை தலைவர் செயலாளர் பொருளாளர் ஆகியோர் மத்திய செயற்குழுவிற்கு கூட்டுப்பொறுப்பு உடையவர்.

## விதி-07

**தொகுதி கிளைகள்:**

ஒவ்வொரு பாராளுமன்ற தேர்தல் தொகுதியிலும் கூட்டணியின் ஒரு தொகுதிக் கிளை அமையும்.

கூட்டணி மத்திய செயற்குழுவின் ஆல் தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டவர் தொகுதிகளை உறுப்பினராகவும் முதலாண்டு தலைவராகவும் இருப்பார்.

ஒவ்வொரு தொகுதிகளையும் ஒரு தலைவர் ஒரு துணைத் தலைவர் ஒரு செயலாளர் துணைச் செயலாளர் ஒரு பொருளாளர் ஆகிய ஐந்து பதவியாலாரயும் ஐந்து முதல் பத்து செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்து இயங்கும்.

தொகுதியில் உள்ள மூலக்கிளைகள் மூலம் கூட்டணியின் கொள்கைகளையும் வேலைத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு தொகுதிகளின் தலைவரும் செயலாளரும் கூட்டுப்பொறுப்பு உடையவர்கள்.

## விதி-08

**பொதுக் குழு:**

ஐ. ம. கா நோக்கம் அடிப்படைக் கொள்கை தேசிய மாநாட்டு தீர்மானம் ஆகியவற்றுக்கு அமைய செயல் திட்டங்கள் வகுப்பது கூட்டணியின் பரிபாலனமும் கூட்டணி பதவியாலரை தெரிவதும் ஐந்து மத்திய செயற்குழு உறுப்பினரை தெரிவதும் பொதுக்குழுவின் அதிகாரத்துக்கு உட்பட்டது.

ஒவ்வொரு தொகுதி கிளையினரும் தலைவர் செயலாளர் பொருளாளர் ஆகிய மூவரும் பொதுக்குழு உறுப்பினர் ஆவார்.

01. இளைஞர் அணி தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேரும்.

02 .மகளிர் அணி தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேரும்.

03. ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தொழில் சங்கத்தால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பேரும்

04. ஜ.ம. கா பதவியாளர்கள் எல்லோரும்

05. மத்திய செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும்

06. பிரதிநிதித்துவம் பெறாத பகுதிகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட பத்து பேரும் பொதுக்குழு உறுப்பினர் ஆவார்

மாநில மாநாட்டுக்கு சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களை ஆக்கும் ஆலோசனைச் சபையாக மாநாட்டுக்கு முன் பொதுக்குழு கூடும்.

மாநில மாநாட்டின் தீர்மானத்திற்கு அமைவாக மேட்பார்க்கும் எல்லா அதிகாரமும் பொதுக்குழுவுக்கே உண்டு.
பொதுச்சபை கூட்டத்துக்கு நிறைவின் இருபத்தி ஒன்று ஆகும்.

## விதி-09

**மத்திய செயற்குழு:**

ஜ.ம.கா வின் தலைவர் பிரதித் தலைவர் பொதுச் செயலாளர் நிர்வாக செயலாளர் பொருளாளர் இருவர் ஆகிய ஆறு உதவியாளர்களும் பாராளுமன்ற தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும் இளைஞர் அணி பிரதிநிதி ஒருவரும் மகளிர் அணி பிரதிநிதி ஒருவரும் பொதுக்குழுவில் தெரிவு செய்யப்பட்ட ஐவரும் தலைவராக தெரிவு செய்யப்பட்ட ஐவரும் இருபத்தொரு உறுப்பினர்கள் மத்திய செயற்குழுவில் இடம்பெறுவர்.

மத்திய செயற்குழுவில் ஏற்பாடு வெற்றிடத்துக்கு அவ் அமைப்பபோ, தலைவரே ஒருவரை தெரிவு செய்வர்.

கூட்டணியின் குறிக்கோளை மாநில மாநாட்டின் தீர்மானத்திற்கு இணங்க

பொதுக்குழுவின் முடிவுகளுக்கு அமைவாகவும் செயலில் உருவாக்கும் அதிகாரம் மத்திய மத்திய செயற்குழுவிற்கே உரியது.

01. தொகுதி கிளைகளை அமைத்தல்.

02. தொகுதி அமைப்பாளர்கள் நியமித்தல்.

03. கிளைகளை கட்டுப்படுத்தல்.

04. கிளைகளின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்.

05. இணைந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளுதல் நீக்குதல் அவற்றிற்கு ஆலோசனை கூறி உதவி செய்தல்.

06. ஐ.ம.கா உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் இடை நீக்கம் செய்தல் உறுப்புரிமை இருந்து நீக்குதல்.

07. தக்க காரணத்திற்கு கிளையின் அமைப்பை அல்லது செயற்குழுவை கலைத்தல் புதிய அமைப்பு செய்தல் தேர்தல் நடத்துதல்.

08. அங்கத்தவர்களுக்கும் கிளைகளுக்கும் இடையே ஏற்படும் பிணக்குகளை தீர்த்தல்.

09. விசாரணைக்கும் நடவடிக்கைகளுக்கும் உப சபைகளின் அமைத்தல் ஆகிய அதிகாரங்களை மத்திய செயற்குழுவிற்கு உரியவை.

ஐ. ம. கா. க்கு வேண்டிய நிதியை திரட்ட லும் அதை தேவைக்கேற்ப உபயோகித்தாலும் கிளைகள் தலைமைச்செயலகம் ஆகியவற்றின் கணக்குகளை பார்வையிட கணக்காய்வாளர் அமைத்தலும் மத்திய செயற்குழுவின் கடமையாகும்.

ஒழுங்கு நடவடிக்கை குழு தேர்தல் நியமன குழு ஆகியவற்றை மத்திய செயற்குழுவை நியமிக்கும்.

வெற்றிடமாக பதவிகள் மத்திய செயற்குழுவினால் நிரப்பப்படும்.

மத்திய செயற்குழு மாதம் ஒரு முறையும் தேவைப்பட்ட போதும் கூடல் வேண்டும்.

மத்திய செயற்குழு கூட்டத்திற்கு நிறைவெண் ஏழு ஆகும்.

அடுக்க மூன்று மக்கிய செயற்குழ கூட்டங்களுக்கு தகுந்த காரணமின்றி சமூகமளிக்காத அங்கத்துவம் பதவியையும் செயற்குழு அங்கத்துவத்தை இழந்தவராக கருதப்படுவார்.

## விதி-10

**வருடாந்த மாநாடு விசேட மாநாடும் :**

வருடாந்த மாநாடு கூட்டணியின் முழு அதிகாரத்திற்கு நிலைகளநாகும்.

மாநாட்டில் தீர்மானம் ஒவ்வொரு அங்கத்தவரையும் கட்டுப்படுத்தும்.

இரண்டு மாணவர்களுக்கு இடையில் இரண்டு வருடங்களுக்கு மேற்படாகவாறு மாநாட்டுக்கு கூறிய இடம் நாள் முதலியவற்றை மத்திய செயற்குழு தீர்மானிக்கும் விசேட காரணங்களுக்காக பொதுக்குழு மாநாட்டை பின் போடலாம்.

மாநாட்டின் கூட்டத்திற்கு முன் கிளைகளின் வருடாந்த கூட்டங்கள் நடத்தப்பட்டு தொகுதிக் கிளைகள் அமைக்கப்பெற்று பொதுக் குழு உறுப்பினரும்.மாநாட்டின் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

மாநாட்டை ஒழுங்கு செய்வதும் நடக்குவதும் மக்கிய செயற்குழவின் பொறுப்பாகும் மாநாடு நடைபெறும் தேர்தல் தொகுதியின் தொகுதிகளை வரவேற்பு குழுவாக அமைத்து உதவி செய்தல் வேண்டும்.

மாநாட்டின் கூட்டத்திற்கு செயலாளர் இருபத்தொரு நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

அவசர விடயத்திற்கு விசேட தேசிய மாநாட்டை மத்திய செயற்குழு கூட்டலாம். இம் மாநாட்டிற்கு பதினான்கு நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

விசேட மாநாட்டில் அதற்கு முக்கிய தேசிய மாநாட்டின் ப பிரதிநிதிகளே வாக்களிக்கும் உரிமை பெற்றவராவார்.

## விதி-11

**தலைவர் :**

ஐ.ம.கா வின் மாநில மாநாட்டிற்கு குறைந்தது பதினைந்து நாட்களுக்கு முன் பொதுக்குழுவின் விசேட கூட்டத்தில் தலைவர் தெரிவு செய்யப்படுவார்.

விசேட பொதுக் குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்பிற்கு முன் எந்த வேட்பாளரும் தமது நியமனத்தை மீட்டுக்கொள்ள உரிமை உண்டு.

வருடாந்த விசேட மாநாடுகளிலும் பொதுக்குழு மத்திய செயற்குழுவிலும் தலைவரே தலைமை வகிப்பார்.

தலைவர் சமூகமளிக்காத போது பிரதித் தலைவரும், அவரும் சமூகமளிக்காதவிடத்து ஏனைய துணைத் தலைவர்களில் ஒருவர் சபை தேர்ந்தெடுத்த படி தலைமை வகிக்கலாம்.

துணைக் தலைவர்களில் ஒருவரை ஏதாவது ஒரு அலுவலையோ குறிப்பிட்ட ஒரு திட்டத்தின் அமைப்பையோ மேற்பார்வை செய்யவும் பொதுவாக தன் கடமைகளை மேற்கொள்ளவும் தலைவர் நியமிக்கலாம்.

தலைவரும் பிரதித் தலைவரும் பொதுச்செயலாளரும் இரு இணைப் பொருளாளரும் கூட்டணியின் எல்லா நிதிகளுக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாவலர் ஆவார். தலைவர் பதவி வெற்றிடம் ஆனால் பிரதி தலைவர் எஞ்சிய காலத்திற்கு தலைவராக பணியாற்றுவார் அவர் அவ்வாறு பணியாற்ற முடியாது போயின் துணைக் தலைவர்களில் ஒருவரை மத்திய செயற்குழு எஞ்சிய காலத்திற்கு தலைவராக பணியாற்றுமாறு நியமிக்கும்.

## விதி-12

**செயலாளர் நாயகம் :**

செயலாளர் ஐ. ம. கா வின் பிரதான செயலாற்றும் அலுவலர் ஆவார். பொதுக்குழு மத்திய செயற்குழு தொகுதி கிளைகள் மூலம் கிளைகள் இணைந்த நிறுவனங்கள் இளைஞரணி மகளிரணி ஆகியவற்றை ஒருமுகப்படுத்துவது மத்திய செயற்குழுவின் ஆணைக்கு அமைவாக கட்டுப்படுத்தி வழி நடத்துவதும் செயலாளரின்

கடமையாகும்.

கேர்கலக்கான விசேட பொதுக்குழு கூட்டக்கிற்கு ஏழு நாட்களுக்கு முன் செயலாளர் பதவிக்கு நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யும்படி செயலாளர் கிளைகளுக்கும் பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் அறிவிப்பார்.

அங்கனம் செயலாளர் பதவிக்கு அனுப்பப்படும் நியமனங்கள் பொதுக்குழு உறுப்பினர் அருவறினால் கையொப்பமிட்டு எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட அபேட்சகர் இன் சம்மதத்தோடு செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

விஷேட பொதுக் குழுக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் செயலாளர் தெரிவு செய்யப்படுவார்.

பொதுக்குழு மக்கிய செயற்குழு ஆகியவற்றை நியமனங்கள் பற்றி தலைவருக்கு ஆலோசனை கூறுவதும் கட்சியின் எல்லா நடைமுறைகளையும் தலைவரின் ஆலோசனையோடு வழிநடத்துதல் செயலாளரின் பொறுப்பாகும்.

செயலாளருக்கு உதவியாக அவருடைய வழிநடத்தலின் கீழ் இயங்குவதற்கு கீழ்க்கண்ட செயலாளர்கள் பொதுச் சபையினால் தெரிவு செய்யப்படுவார்.

அ. நிர்வாகச் செயலாளர்
ஆ. இளைஞர் அணி செயலாளர்
இ. தொழிற்சங்க செயலாளர்.
ஈ. சட்டத்துறை செயலாளர்
உ. நிதிச் செயலாளர்
ஊ. மகளிர் அணி செயலாளர்.

கட்சியின் தலைமை அலுவலகத்துக்கும் பதிவேடுகளுக்கும் பொறுப்பாக இருப்பதும் ஏனைய அலுவலகங்களையும் கிளைகளையும் மேற்பார்வை செய்வதும் அமைப்பு நிர்வாக செயலாளரின் கடமையாகும்.

இளைஞர் அணி வழி நடத்துவதும் இளைஞர் அணி அமைப்பு வேலைகளுக்கு பொறுப்பாக இருத்தல் இளைஞர் அணி செயலாளர் இன் கடமைகளாகும்.

ஐ.ம. கா சேர்ந்த தொழிற்சங்கங்களை வளர்த்தாலும் அவற்றுக்கு சகலவிதமான ஒத்துழைப்பை அளித்தலும் தொழிற்சங்க பொறுப்பு செயலாளரின் கடமைகளாகும்.

கூட்டணியின் இயக்கம் சம்பந்தமாக எழக்கூடிய சட்டப் பிரச்சினைகளில் ஆலோசனை வழங்குதலும் பாதிக்கப்பட்டோருக்கு சட்ட உதவிக்கு ஏற்பாடு

செய்தலும் சட்டத்துறை செயலாளரின் கடமைகளாகும்.

பொருளாதார வளர்ச்சி பற்றிய திட்டங்களை தயாரிக்காலம் அவற்றை செயல்படுத்துவதற்கு வேண்டிய அமைப்புகளை உருவாக்குதலும் செயலாளரின் கடமைகளாகும்.

மகளிர் அணி வழிநடத்தலும் மகளிர் அணி அமைப்பு வேலைகளுக்கு பொறுப்பாக இருத்தல் மகளிர் அணி பொறுப்பு செயலாளரின் கடமைகளாகும்.

## விதி-13

**பொருளாளர் :**

ஐ. ம. கா நன்கொடைகள் உறுப்பரிமை கட்டணங்கள் மற்றும் வாவகள் என்பவற்றால் சேரும் பணத்திற்கு தனியாகவும் கூட்டாகவும் இணை பொறுப்பாளரே பொறுப்பு உடையவர்.

ஒவ்வொரு கிளையினதும்:

அ. அங்கத்தவர் பட்டியல்
ஆ. புதிதாக பதிந்த அங்கத்தவர் பட்டியல்.

இ. கட்டணம் செலுத்தாத அங்கத்தவர் பட்டியல்.

ஈ. அங்கத்துவத்தின் மாற்றம்

இதைப் பற்றி விவரங்களை திரட்டி பொறுப்பாளர் மத்திய செயற்குழுவிற்கு அறிக்கையை சமர்ப்பிப்பார்.

செயலாளரின் அனுசரணையோடு ஒரு பெயர் பட்டியலையும் கணக்குகளையும் பார்வையிடவோ பரிசோதிக்கவும் பரிசோதனை செய்விக்கவும் இணை பொருளாளர்ருக்கு அதிகாரமுண்டு.

## விதி-14

**ஒழுங்கு நடவடிக்கைகுழு :**

செயலாளர் தமக்கு சமர்ப்பிக்கப்படும் ஜ. ம. கா. வின் எந்த உறுப்பினர் மீதான குற்றச்சாட்டையும் விசாரித்து அதற்குரிய தண்டனையை மத்திய செயற்குழுவிற்கு எடுத்துரைக்க ஒழுங்கு நடவடிக்கை குழுவுக்கு அதிகாரம் உண்டு.

மத்திய செயற்குழு முடிவு எடுக்கும் வரை எந்த உறுப்பினரையும் இடைநீக்கம் செய்வதற்கு செயலாளருக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் இக் குழுவுக்கு உண்டு.

ஆண்டு மாநாட்டிற்கு குறைந்தது 15 நாட்களுக்கு முன் கூட்டப்படும். விசேட பொதுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர்.

*01.* தலைவர்
*02.* பொதுச் செயலாளர்
*03.* பிரதி தலைவர்
*04.* தேசிய அமைப்பாளர்
*05.* நிர்வாகச் செயலாளர்
*06.*பிரதி பொதுச்செயலாளர்
ஐந்து மத்திய செயற்குழு உறுப்பினர்கள்

மேற்கூறிய பதவிகள் எதற்கும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் எவரும் இவ்வமைப்பு விதிகள் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கூட்டணியுடன் ஈடுபட்டவர் ஆக இருத்தல் வேண்டும் அல்லது குறைந்தது ஐந்து வருடங்களாவது உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

இத் தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பு செயலாளர் நாயகத்தை சாரும்.

## விதி-15

**அமைப்பு விதி திருத்தங்கள்:**

ஜ. ம. கா. வின் நோக்கம், அடிப்படைக் கொள்கைகள் தவிர்ந்த ஏனைய அமைப்பு விதிகளின் திருத்தங்கள் பொதுக்குழு கூட்டத்தில் முன்னறிவித்தல் உடன் கொண்டுவரப்பட்டு சமூகம் அளித்திருக்கும் பொதுக்குழு உறுப்பினரில் குறைந்தது 2/3 பங்கினர் ஆல் நிறைவேற்றப்படலாம்.

கட்சியின் நோக்கம் அடிப்படைக் கொள்கைகள் பற்றிய எந்த திருத்தமும் முதலில் ஆலோசனை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருடாந்த மாநாட்டில் அல்லது விசேட மாநாட்டில் பிரதிநிதிகள் குறைந்தது 2/3 பங்கினரால் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

எந்த தொகுதிகிளையோ இளைஞர் அணியோ, மகளிர் அணியோ திருத்தங்களை பொதுக்குழுவுக்கு அனுப்பு உரிமை உடையவர்.

## விதி-16

**அலுவலர் பதவிக்காலம்:**

வருடாந்த மாநாட்டின் முன் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் மாநாட்டின் முதல் நாள் விடையாலோசனைக் குழு கூட்டத்தில் பதவியேற்பர்.

அடுத்த மாநாட்டு முதல் நாள் விடயாலோசனைக் கூட்ட ஆரம்பத்தில் புதிய அலுவலர்களிடம் பொறுப்பை கையளித்து பதவியிலிருந்து விலகுவர்.

செயற்குழு உறுப்பினர் தொகுதி குழு உறுப்பினரும் பொதுக்குழு உறுப்பினர் தகுந்த காரணமின்றி மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காத தவறின் பதவியையும் அக்குழுவின் உறுப்புரிமையும் இழந்தவராக கருதப்படுவார்.

ஏற்றுக்கொள்ளப்படும் விலகலின்னாலோ, ஒழுங்கு நடவடிக்கையின் பின் நீக்கப்படுவதாலோ வேறு காரணத்தினாலோ வெற்றிடம் ஆகும் ஆகும் பதவிகள் மத்திய செயற்குழுவினால் நிரப்பப்படும்.

## விதி-17

**பொது:**

இவ்வமைப்பு விதிகளின் நடைமுறை பற்றி தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மத்திய செயற்குழுவிற்கு உண்டு.

தேவையேற்படும் இடத்து அமைப்பு விதிகளில் இடைக்கால மாற்றங்களை செய்து பின் பொதுக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு மத்திய செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

அமைப்பு விதிகள் 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

★ ★ ★